தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

## ஆணை நாள் 06.11.2020

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-12380/A/2019**

திரு A.வெங்கடேசன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
திருப்பூர். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 11.10.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், திருப்பூர் மாவட்டம், ஊதியூர் காவல் நிலைய குற்ற எண்.175/2019-ல் விபத்து காயம் / இறப்பு நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கை சேவை தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதுசம்மந்தமாக 12 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 01.11.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 04.11.2019-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 18.11.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 06.12.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 07.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 19.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை

என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 29.10.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் 14.10.2020 நாளிட்ட ந.க.எண்.07/த.அ.உ.ச./பொ.த.அ.தி/2020 என்ற கடிதத்தின் வாயிலாக மனுதாரர் எழுப்பிய கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கடிதத்தினை ஆணையத்திற்கு சமர்பித்துள்ளார். மனுதாரரும் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்துள்ளார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA-12380/A/2019**

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
திருப்பூர்.

மனுதாரர்

திரு A.வெங்கடேசன்,
86, புதுப்பாளையம்,
ஆலப்பாளையம் அஞ்சல்,
ஈரோடு-638 008.

PR/PS 09.11.2020

# தமிழ்நாடு காவல் துறை

அனுப்புநர்

ச. ஜெயச்சந்திரன்
பொது தகவல் அதிகாரி /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்),
திருப்பூர் மாவட்டம்.

பெறுநர்

திரு. மாண்பமை தகவல் ஆணையாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண் 2, தியாகராய சாலை
( ஆலையம்மன் கோவில் அருகில் )
தேனாம்பேட்டை, சென்னை- 600 018.

ந.க.எண். 07/ த.அ.உ.ச / பொ.த.அ.தி / 2020 நாள். 14.10.2020.

அய்யா,

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 சட்டப் பிரிவு 19(3)-ன் கீழ் - மனுதாரராகிய தாங்கள் மாண்பமை மாநில தகவல் ஆணையத்திற்கு அனுப்பிய மனுவிற்கு பதில் அனுப்புதல் - சம்மந்தமாக.

பார்வை : தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண் SA 12380/A/2019. - dated 07.10.2020

*****

மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையம் பார்வை 1 யில் கண்ட ஆணையத்தின் உத்திரவு நகல் இவ்வலுவலகத்தில் 12.10.2020 ம் தேதி பெறப்பட்டு மேற்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரராகிய தாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 சட்டப் பிரிவு 19(3) கீழ 06.12.2019-ம் தேதியிட்டு அனுப்பிய இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு பார்வை 1 யில் கண்ட மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையம் உத்திரவின் படி விசாரணை முடிக்கப்பட்ட கோப்புகளின் சான்றிட்ட நகல்களை பிரிவு 7(6) ன் படி எவ்விதக் கட்டணமுமின்றி, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு தகவல்களை தெரிவிக்கும்படி உத்திரவிடப்பட்டுள்ளது.

3. மனுதாரர் முகவரிக்கு பதிவு அஞ்சல் வழியாக மனுதாரர் கோரியுள்ள ஊதியூர் காவல் நிலையத்தின் குற்ற எண் 175/2019 U/s 279,337 IPC வழக்கில் கோரியுள்ள இனம் 01 முதல் 12 வரை ஆவணங்களின் நகல் காவல்

ஆய்வாளரிடமிருந்து பெற்று பதில அறிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 சட்டப் பிரிவு 7(6)-ன்படி இலவசமாக மனுதாரர் மேற்கண்ட அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொண்டும், மேற்கண்ட மனுவின் மீது மேல் நடவடிக்கை வேண்டாம் என்று எழுதி கொடுத்த கடிதம் இத்துடன் இணைத்து தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

பொது தகவல் அதிகாரி/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
(தலைமையிடம்),
திருப்பூர் மாவட்டம்.